PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Nada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

ஏகலைவா பள்ளிகள் குறித்து குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் எழுதிய கட்டுரையை பிரதமர் நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்

சென்னை – 16 நவம்பர், 2026 ஏகலைவா பள்ளிகள் குறித்து குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் எழுதிய கட்டுரையை பிரதமர் நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி, குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் எழுதிய கட்டுரை ஒன்றைப் பகிர்ந்துள்ளார்.

ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகளின் பரிணாம வளர்ச்சியையும், தரமான கல்வி, முழுமையான மேம்பாடு ஆகியவற்றின் மூலம் பழங்குடியினக் குழந்தைகளுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதில் அவற்றின் பங்கையும் இக்கட்டுரை விவரிக்கிறது என பிரதமர் கூறியுள்ளார். கூடுதல் படிப்புகள், இருமொழிக் கல்வி, தொழில்நுட்ப வசதியுள்ள வகுப்பறைகள், விளையாட்டு, தொழிற்பயிற்சி போன்ற முக்கிய முன்முயற்சிகளையும், ஐஐடி, எய்ம்ஸ், பிற முதன்மை நிறுவனங்களில் சேரும் மாணவர்களின் சாதனைகளையும் இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள், தரமான கல்வியின் மூலம் பழங்குடியினக் குழந்தைகளுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன.

பழங்குடியின பெருமை தினத்தன்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகளின் பரிணாம வளர்ச்சி குறித்தும், பழங்குடியின மாணவர்களுக்குத் தரமான கல்வியையும் முழுமையான வளர்ச்சியையும் வழங்குவதில் அதன் பங்கு குறித்தும் கட்டுரை எழுதியுள்ளார்.

கூடுதல் இணைப்புப் படிப்புகள், இருமொழிக் கல்வி, தொழில்நுட்ப வசதியுள்ள வகுப்பறைகள், விளையாட்டு, தொழிற்பயிற்சி போன்ற முன்முயற்சிகளையும், தற்போது ஐஐடி, எய்ம்ஸ், பிற முதன்மை நிறுவனங்களில் சேரும் மாணவர்களின் சாதனைகளையும் அவர் எடுத்துரைக்கிறார்.

கட்டாயம் படிக்க வேண்டிய கட்டுரை!